குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.61/2017

அ.சா.1

2025–ம் ஆண்டு நவம்பர் 03–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பன்னீர்செல்வம் | தொழில் | |
| தந்தை பெயர் | கேசவமூர்த்தி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.16 மணி,

Accused A1.Vijayavarman, present. A2.Jayakumar is Absent. Petition u/s.317 Cr.P.C fiiled and allowed. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் நல்லாகவுண்டம்பட்டி புதுக்காலனியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். கடந்த 03.03.2016 ஆம் தேதி அன்று எனக்கு வேலை இல்லாததால், என் குழந்தைகளை பள்ளியில் விட்டுவிட்டு, வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். வரும் வழியில் எதிரிகளுடன் சேர்ந்து எனது அண்ணன் மகன் ஷியாம் என்பவரும் மது அருந்திக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன்.

2.நான், என் அண்ணன் மகன் ஷியாம் ஐ ஏன் மது அருந்துகிறாய் என்று கண்டித்து, அந்த இடத்திலிருந்து வீட்டிற்கு அனுப்பி விட்டேன். எதிரிகள் மூவரிடமும் சிறு வயதுள்ள, அப்பாவை இழந்த எனது அண்ணன் மகனை ஏன் கெடுக்கிறீர்கள் என்று சத்தம் போட்டேன். அவர்கள் என்னிடம் நீ எதற்கு எங்களிடம் கேட்கிறாய், ஷியாம் என்ன உங்கள் மகனா என்று வாக்குவாதம் செய்தனர்.

3. நான் அதன்பின்பு வீட்டிற்கு சென்றுவிட்டேன். மதியம் சுமார் 1 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது, எதிரிகள் மூவரும் என் வீட்டு வாசலில் வந்து டேய் எங்கடா இருக்க வெளியே வாடா, ஏன்டா பொட்டையன் மாதிரி உள்ள இருக்க, தேவிடியா பையா என்று சத்தம் போட்டார்கள்.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.03 17:31:12 +0530

4. நான் எதிரிகள், போதையில் இருப்பதால், அவர்கள் என்னிடம் சண்டை போடக்கூடும் என்று அச்சத்தில், நான் வீட்டின் கதவை உள்பக்கமாக தாள் போட்டுக்கொண்டேன். எதிரிகள் மூவரும் கதவை திறப்பதற்கு முயற்சி செய்தார்கள். 1 ஆம் எதிரி விஜயவர்மன், வீட்டின் கதவில் இருந்த கண்ணாடியை உடைத்து, அவ்வழியாக கையை விட்டு, கதவின் உள் தாழ்ப்பாளை திறப்பதற்கு முயற்சி செய்தார்கள்.

5. நான் உடனே சத்தம் போட்டுக்கொண்டு, கண்ணாடியை ஏன் உடைத்தீர்கள் என்று கேட்டுக்கொண்டே, கதவை திறந்தேன். எதிரிகள் மூவரும் வீட்டிற்குள் வந்து, கந்தசாமி மகன் இரண்டாம் எதிரி குமார் என்கிற ஜெயக்குமார் கையால் என் வயிற்றில் குத்தினார். 3 ஆம் எதிரி தங்கவேலு என்னை எனது கைகளை இறுக்கி பிடித்துக்கொண்டு இருந்தார். நான் கத்தும் சத்தம் கேட்டு அக்கம் பக்கம் இருந்தவர்கள் வந்தார்கள்.

6. நான் சத்தம் போட்டுக்கொண்டு வீட்டிலிருந்து வெளியே வந்தேன். எதிரிகள் வீட்டிலிருந்து வெளியே வந்து, இரண்டாம் எதிரி ஜெயக்குமார் மற்றும் 3 ஆம் எதிரி தங்கவேலு இருவரும் வீட்டின் வெளியே நிறுத்தியிருந்த ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தை உதைத்து கீழே தள்ளி இருசக்கர வாகனத்தின் முகப்பு விளக்கு மற்றும் சைடு மிரர் ஆகியவற்றை உடைத்து இருவரும் வண்டிக்கு தீ வைப்பதற்கு தீக்குச்சியை பற்ற வைத்து வண்டியின் மீது போட்டார்கள். ஆனால், வண்டியின் பெட்ரோல் லீக் ஆகாததால் தீ பற்றவில்லை.

7. எனக்கு எதிரிகள் அடித்ததில் தலை, கன்னம், வாயில் ரத்தக்காயம் ஏற்பட்டது. உடலில் எதிரிகள் அடித்த இடத்தில் வலி ஏற்பட்டது. சம்பவ இடத்திடற்கு அருகில் வாடகைக்கு குடியிருந்த மீனா என்ற பெண் எதிரிகளிடம் அண்ணனை என்ன செய்கிறீர்கள் என்று கேட்டார். 2 மற்றும் 3 எதிரிகள் இருவரும் அந்த பெண்ணை பார்த்து உனக்கு என்ன அக்கறை, நீ என்ன பன்னீர் செல்வத்தை வைத்துக்கொண்டிருக்கிறாயா என்று தகாத வார்த்தைகளால் பேசி கன்னத்தில் அடித்து, கீழே தள்ளிவிட்டார்கள்.

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.03 17:31:15 +0530

8. பின்பு, எதிரிகள் மூவரும் என்னை பார்த்து உன்னை கொன்றுவிடுவேன், இல்லாமல் செய்துவிடுவேன் என்று பேசினார்கள். எனக்கு மயக்கமாக இருந்ததால், எனது தங்கையின் கணவர் சீனிவாசன் இருசக்கர வாகனத்தில் என்னை உட்காரவைத்து ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார். அங்கு 2 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்து, புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. ( **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

9. சம்பவத்தின்போது, எதிரிகள் உடைத்த வீட்டின் கதவில் இருந்த கண்ணாடியின் துண்டு எனது இடது கால் பாதத்தில் கிழித்து, காயம் ஏற்பட்டது. அந்த காயம் எனக்கு சர்க்கரை நோய் இருந்த காரணத்தினால் முழுமையாக குணமாகாமல், எனது இடது காலில் முழங்காலுக்கு கீழ் உள்ள பகுதியை அறுவை சிகிச்சை செய்து நீக்கி தற்போது செயற்கை கால் பொறுத்தியுள்ளார்கள். இதனால் எனக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டுவிட்டது. போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.41 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.03 17:31:19 +0530